# அத்தியாயம் : 10

## உலகில் பல பாகங்களிலும் இசைந்து வாழும் ஆதிவாசிகள்

மனிதனின் வாழ்க்கைக் கோலத்தை ஒழுங்கு படுத்துவதில் வெப்பநிலை, மழைவீழ்ச்சி, தரைத்தோற்ற அமைப்பு ஆகிய புவிச் சூழல்கள் நேரடியாகச் செல்வாக்கு செலுத்துகின்றன. உலகின் பல்வேறு பிரதேசங்களில் காணக்கூடிய சூழலுக்கு ஏற்ப வாழும் முறையானது அப்பிரதேசங்களைத் தாயமாகக் கொண்ட மனிதர்களுக்கே உரித்தாகியுள்ளது. இன்று உலகில் பல்வேறு வகையான சூழற் பிரதேசங்களில் வாழும் ஆதிவாசிகள் தமக்கென சிறப்பான இடத்தை அமைத்துக் கொண்டுள்ளனர். இந்த ஆதிவாசிகள் பற்றி அறிந்து கொள்வதற்காக அவர்கள் எந்தளவு சூழலுக்கு கட்டுப்பட்டவர்களாக வாழ்கிறார்கள் என்பது பற்றி ஆய்ந்து பார்ப்பதற்கு நவீன மானிடவாதிகளும் சூழல் ஆதிக்கவாதிகளும் முயற்சி செய்வதைக் காணக்கூடியதாய் இருக்கின்றது. ஐக்கிய நாடுகள் தாபனமும் இது தொடர்பாக அறிந்து கொள்வதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமித்தது. 1993 ஆம் ஆண்டை ஆதிவாசிகளின் ஆண்டாகியதுடன் ஆதிவாசிகள் தினம் ஒன்றும் பிரகடனப்படுத்தப்பட்டது. இன்று இனங்காணப்பட்ட ஆதிவாசி மக்கள் பிரிவுகள் பல உள்ளன. தேசப்படத்தில் 10.1 ஆதிவாசிகள் மக்கள் பிரிவினர் வாழும் பிரதேசங்கள் காட்டப்பட்டுள்ளது.




10.1 தேசப்படம் ஆதிவாசி மக்கட் பிரிவினர் வாழும் பிரதேசங்கள்

எஸ்கிமோவர், நீக்கிரோ, பிக்மிஸ், பெடுவின், டுவேரக், நெகிறிரோ, அவுஸ்திரேலியாவின் அபோறியின்ஸ், நியூசிலாந்தின் மயோரி, ஜப்பானின் ஐனுவர், செவ்விந்தியர், இலங்கையின் வேடுவர்

**எஸ்கிமோவர்**

வாழும் பிரதேசங்கள் :- ஆட்டிக் பிரதேசமும் கிறீன்லாந்தின் மேற்கு கரையோரமும்

**புவிச் சூழலின் தன்மை**

- வருட சராசரி வெப்பநிலை $10^0$C க்கும் குறைவு.
- ஜுலை மாதத்தில் சராசரி வெப்பநிலை $5^0$C வரை ஆகும்.
- மாரி காலத்தில் ஒரு மாதத்திற்கும் அதிகமாக நிலம் இருளாகக் காணப்படும்.
- எட்டு அல்லது ஒன்பது மாதங்கள் நிலம் பனியால் மூடப்பட்டிருக்கும்.
- கடற்கரையோரத்தில் பனிக்கட்டி உறைந்து காணப்படும்.

### சூழலுக்கு இசைவாக்கம் பெற்றுள்ள விதம்

- அதிக குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக கம்பளி உரோமத்தினால் தயாரிக்கப்பட்ட ஆடைகளை பயன்படுத்துவதுடன் வீடுகளும் குளிருக்குப் பொருந்தக்கூடியவையாக கட்டப்பட்டிருத்தல்.
- குளிர் காலத்தில் கல், திமிங்கில எலும்புகளை பயன்படுத்தி உருவாக்கிய தோல்களாலும் பனிகட்டியாலும் மூடப்பட்ட கூடாரங்களில் வாழ்வார்கள். அதனுள்ளே இருக்கும் ஒரு பகுதி நிலத்திற்குக் கீழே இருக்க நீண்ட ஒடுங்கிய வழியினுடாகவே செல்ல முடியும். அத்தகைய வீடுகள் "இக்ளு" என அழைக்கப்படுகின்றன. இக்ளு வீடுகளை வெப்பமாக்குவதற்கு வீட்டு நிலத்திற்கு அடியில் வெப்ப சூளைகள் உள்ளன. எஸ்கிமோவரின் இக்ளு வீடு ஒன்றை உரு 10.1 இல் காணலாம்.
- கோடையில் பாரிய கற்குகைகள், பலகைத்தாள் வைத்து தயாரிக்கப்பட்ட முக்கோண வடிவத்திலான கூடாரங்களில் வாழ்ந்து வருவார்கள்.
- தாவரங்கள் காணப்படாமையினால் வேட்டையாடியும் மீன்களைப் பிடித்தும் தமக்கு தேவையான உணவைப் பெற்றுக்கொள்கின்றனர்.
    - சீல் மீன்களை வேட்டையாடல் முக்கியத்துவம் பெறுகின்றது.
    - அம்பு, வில்லு, ஈட்டி என்பவற்றைத் தயாரிப்பதற்கு வேண்டிய அரிமரங்களைக் கடலில் மிதந்து வரும் மரங்களில் இருந்து பெற்றுக் கொள்வர்.
    - தொப்பிகள் சீல் மீன்களின் முட்களாலும் தோல்களாலும் தயாரிக்கப்படுகின்றன.

- உணவைப் பெறுவதில் சிரமங்கள் இருந்தாலும் அதற்குப் பொருத்தமான முறையில் கருவிகளையும் முறைமைகளையும் ஒழுங்குப்படுத்திக் கொண்டுள்ளனர்.



உரு 10.1
இக்ளு வீடு

**செயற்பாடு 1**

- எஸ்கிமோவரின் வாழ்க்கைக் கோலம் சம்மந்தமான தகவல்களை சேகரித்து புவியியல் சஞ்சிகைக்கு கட்டுரை ஒன்றை வரைக.

### நீக்ரோக்கள் பிக்மீஸ்கள்

வாழும் பிரதேசங்கள் : ஆபிரிக்காவின் காட்டு பிரதேசங்கள் (கொங்கோ, சயர், பொட்ஸ்வானா முதலான நாடுகள்)

### புவிச் சுற்றாடலின் தன்மை

ஆபிரிக்கா கண்டத்தில் கொங்கோ காட்டுப்பகுதி நீக்ரோக்களினதும் பிக்மீஸ்களினதும் பிறப்பிடமாகக் கருதப்படுகிறது. வருடம் முழுவதும் பரவிக்காணப்படும் உயர் வெப்பநிலை மழைவீழ்ச்சி காரணமாக இப்பிரதேசங்கள் அடர்ந்த காடுகளாகக் காணப்படுகின்றன. பெரிய கிளைகள் படர்ந்து கொடிகளால் இணைக்கப்பட்டு இருப்பதனால் இருளடைந்ததாகக் காணப்படுகின்றது. கீழ்நிலவளரிகள் அதிகமானதால் காட்டுக்குள் பிரவேசிப்பது கடினமாகும். சேற்று நிலங்களும் உண்டு. இங்கு நுளம்புகளாலும் பல்வேறுப்பட்ட கிருமிகளாலும் இடர்கள் ஏற்படுகின்றன. யானை, புலி, பன்றி ஆகிய மிருகங்களும் இங்கு உண்டு.

**சூழலுக்கு இசைவாக்கம் பெற்றுள்ள விதம்**

- காடுகளுக்குச் செல்வது கடினமானதால் நதிக்கரையோர எல்லைகளில் குடிசைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- வாழை, கிழங்கு, அவரை வகைகளை உணவாக உட்கொள்கின்றனர்.
- சாதாரண வாழ்க்கை வாழ்கின்றனர். அரிமரங்களால் செய்யப்பட்ட வீட்டுப்பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் ஆடுகள் கோழிகள் சிறிய அளவில் உள்ளது.
- விவசாய நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுவதன் காரணமாக உணவை சேகரிப்பதில் பிரச்சனைகள் உள்ளன.
- வெப்பம், குளிர் காலநிலையில் துன்பத்தோடு வாழ்க்கை நடத்துகின்றனர்.

## பிக்மீஸ்கள்

**சூழலுக்கு இசைவாக்கம் பெற்ற முறை**

- விவசாயத்திலோ மிருக வளர்ப்பிலோ அவ்வளவு தூரம் முன்னேறவில்லை.
- வேட்டையாடுதல் பிரதான ஜீவனோபாயமாகும்.
- அடிக்கடி வாழும் இடங்களை மாற்றிக் கொள்ளுதல்
- அதிக மழைவீழ்ச்சியுள்ள சந்தர்ப்பங்களில் இலைகளால் வேயப்பட்ட குடிசைகளில் வாழ்வார்கள்


உரு 10.2 பிக்மிஸ் வீடு

## பெடுவின்கள்

வாழும் பிரதேசங்கள் :- ஆபிரிக்காவின் சகாரா பிரதேசம்

**புவிச்சூழலின் தன்மை**

அதிக வெப்பம் அதிக ஆவியாதல் குறைந்த மழைவீழ்ச்சி என்பன காணப்படுதலால் ஆபிரிக்கா கண்டத்தில் சகாரா பிரதேசங்களில் வெப்பப் பாலைவனக் காலநிலை நிலவுகிறது. பாரிய மணற்பிரதேசங்கள் இருப்பதால் தாவரங்களின் வளர்ச்சி குறைவாக உள்ளது. பாலைநிலப் பசுந்தரைக்கு அண்மையில் சிறிதளவு தாவரங்கள் வளர்வதுடன் அதற்கண்மையில், பெடுவின் மக்கள் கூட்டம் வசிக்கும்.

**சூழலுக்கு இசைவாக்கம் பெற்றுள்ள விதம்**

- வரட்சித் தன்மை, மணல் கலந்த சுற்றாடல் காரணமாக பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபட முடியாதுள்ளது. அதனால் உணவைப் பெற்றுக் கொள்வது மிருகங்களிலிருந்தாகும். ஆட்டிலிருந்து பாலையும் இறைச்சியையும் செம்மறியிலிருந்து இறைச்சியையும் தோலையும் பெற்றுக்கொள்கின்றனர்.
- ஒட்டகம் அவர்களது நண்பனாகும். பெடுவின் இனத்தவர்களின் கூடாரங்களையும் தளபாடங்களையும் சுமந்து கொண்டு இடத்திற்கிடம் செல்ல ஒட்டகம் பயன்படுகின்றது.
- அலைந்து திரியும் நாடேடி வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுள்ளார்கள்.

## அபோரிஜின்ஸ்

வாழும் பிரதேசங்கள் :- அவுஸ்திரேலியா (உள்நாட்டில்)

**புவிச்சூழலின் தன்மை**

அவுஸ்திரேலியாவில் கிழக்கு பகுதியில் மேட்டு நிலமும் அதற்கு மேற்கே பரந்த சமவெளியும் அதற்கு மேற்கே அவுஸ்திரேலிய பாலைவனப் பிரதேசங்களும் உண்டு. அவுஸ்திரேலியாவின் வடக்கு மேற்குப் பகுதிகள் வெப்பம் அதிகமானவையாகும். அதிகமான காடுகள் அடர்த்தியானவை இல்லை. அபோரிஜின்களின் வாழிடங்கள் இப்பிரதேசங்களாகும்.

**சூழலுக்கு இசைவாக்கம் பெற்றுள்ள விதம்**



உரு 10.3 ஓர் அபொறிஜின்ஸ்

- அபோரிஜின்கள் சிறு குழுக்களாக வாழ விரும்புகின்றனர்.
- அலைந்து திரியும் வாழ்க்கையை மாற்றி நிரந்தரமான வாழ்க்கையை மேற்கொள்ளக் கூடிய விருப்பமோ தேவையோ அவர்களிடத்தில் இல்லாமை.
- நிரந்தர வதிவிடம் இல்லாமையினால் தற்காலிகமான குடிசைகளில் வாழ்வார்கள். அவை மரங்களின் கிளைகளாலும் இலைகளாலும் புற்களாலும் அமைக்கப்பட்டிருக்கும்.
- அவர்கள் மிகவும் சாதாரண வாழ்க்கையே வாழ்கின்றனர். ஆடைகள் மிகவும் குறைவாகவே அணிவார்கள்.
- வேட்டையாடுதல் பிரதான ஜீவனோபாயமாகும். அதற்குத் தேவையான உபகரணங்ளை செய்து கொண்டுள்ளனர். ஈட்டி, தடிகள் என்பவற்றை எடுத்து செல்லப் பொருத்தமான பைகள் தயாரித்து வைத்திருப்பர்.
- பெண்களும் பிள்ளைகளும் காட்டில் அலைந்து திரிந்து கிழங்கு வகை, பறவைகளின் முட்டை, புழுக்கள் கூடுகளில் இருக்கும் பறவைக்குஞ்சுகள் என்பவற்றை உணவுக்காக சேகரிக்கின்றனர்.

இவற்றை தவிர ஆதிவாசி மக்கள் கூட்டம் பரவியுள்ள பிரதேசங்கள் பலவற்றைக் காணலாம். தென் அமெரிக்காவில் அடர்ந்த காட்டுப் பகுதிகளுடன் உயர் நிலங்களில் ஈரலிப்பான பிரதேசங்களில் அமேசன் இந்தியர்கள், இன்கா ஆகிய ஆதிவாசிகள் வாழ்கின்றனர். ஆபிரிக்கா கண்டத்தின் கிழக்கு பிரதேசத்தில் ஹவுசா, புலானி, புஸ்மன்கள், பன்ட்டு, ஹொட்டன்டொ ஆகிய பெயர்களினால் அறிந்து கொள்ளக்கூடிய மக்கள் பிரிவினர் பலர் வாழ்கின்றனர். அதைத்தவிர மலேசியாவில் சகாயும் இலங்கையின் வேடர்களையும் ஆதிவாசியாக குறிப்பிடலாம்.

**அனைத்து ஆதிவாசிகளிடமும் காணக்கூடிய பொதுவான பண்புகள்.**

உலகிலே சகல பிரதேசங்களிலும் பரந்து காணப்படும் ஆதிவாசிகள் அலைந்து திரிபவர்களாகவும் வேட்டையாடுவோராகவும் காடுகளில் உள்ள பொருட்ளை சேகரிப்போராகவும் உள்ளனர். வேட்டையாடுவதற்கு எளிய கருவிகள் ஈட்டி, நீண்ட கூரான தடி, என்பவற்றைப் பயன்படுத்துகின்றனர். இருப்பிடம் என்றவகையில் கற்குகை அல்லது அமைத்துக் கொண்ட சிறிய குடிசைகள் எனபன சகல மக்கள் கூட்டத்தினரிடமும் உண்டு. கொஞ்சம் உடலை மறைத்துக் கொண்டு அல்லது நிர்வாணமாக இருத்தல் அவர்களின் பிரதான இலட்சணமாகும். சிறு குழுக்களாக வாழும் அவர்களுக்கு சூரியன் தெய்வமாகும். பாரியமரங்கள், குன்றுகள் போன்ற இயற்கைப் பொருட்களையும் வணங்குவார்கள். எதிரிகளைத் தாக்குவதற்கு மந்திரதந்திரங்களுடனான கிரிகைகளில் ஈடுப்படுவர்.

**சவால்கள்**

1. ஆதிவாசிகளின் வாழிடங்களாக இருந்த இக்காடுகள் இன்று பல்வகையான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதனால் அவர்களின் அதிகாரபிரதேசங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக அமேசன் பள்ளத்தாக்கிற்கு குறுக்காக அதிவேக போக்குவரத்து பாதை அமைக்கப்படுவதற்காக அவர்களின் வாழிடங்கள் அகற்றப்பட்டுள்ளன. இலங்கையில் வேடர்களினதும் அவுஸ்திரேலியாவின் அபோரிஜினிஸ்களின் நிலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
2. நிலப்பிரதேசம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உருவாகியுள்ள மனவேதனையால் அவர்களின் பாரம்பரிய கலாசாரங்களின் பெறுமதியையும் பாதுகாத்துக் கொள்வதற்கு தடைகளும் ஏற்படுகின்றன.
3. உலகின் நவீன பொருளாதாரக் கோலங்களும் துரிதமாகவளர்ச்சியடைந்து வரும் நகராக்கத்தின் ஏற்படும் பாதிப்புக்களிலும் அவர்கள் படிப்படியாக் சிக்கிக் கொள்வதனால் பாரம்பரிய வாழ்க்கைக் கோலம் வீழ்ச்சியடைய ஆரம்பித்துள்ளது.
4. ஆதிவாசி சமூகத்தில் முதியோருக்கும் இளைஞர் பரம்பரைக்கும் இடையில் செயற்பாடுகளிலும் கருத்துக்களிலும் வேறுபாடுகள் ஏற்படுகின்றன.
5. ஏனைய மக்கள் பிரிவுகளுடன் திருமண தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்வதனால் கலப்பு இனம் உருவாகின்றது.
6. பழங்குடிகளுக்கிடையில் சண்டைகள் ஏற்படுதல்.

**செயற்பாடு 2**

- உலகில் ஆதிவாசிகள் சம்பந்தமாக பின்வரும் தகவல்களின் கீழ் புத்தகமொன்றை ஒழுங்குப்படுத்துக. ஆதிவாசிகள் வாழும் பிரதேசங்கள், வீடுகள், குடிசைகள், உணவு, பானம், வாழ்க்கை, வழிபாட்டுக் கிரிகைகள், நம்பிக்கைகள், முகங்கொடுக்கக்கூடிய சவால்கள்.
- உலகின் ஆதிவாசிகள் சம்பந்தமான படங்களை சேகரித்து ஒழுங்குப்படுத்துக.
- ஆதிவாசிகளுக்கு ஏற்படும் சவால்களை குறிப்பிடுக?